# நிலை 2 பிழையின்றிப் பேசவும் எழுதவும் இணையவழியிலான பயிற்சி

பிழையின்றிப் பேசுதல், எழுதுதல் என்கிற தலைப்பில் பயிற்சி கொடுக்கச் சிந்தித்த பொழுது, 1) எழுத்து 2) சொல் 3) தொடர் என்கிற மூன்று தலைப்புகளில், கருத்துருக்களை உள்வாங்கினாலே, பிழையின்றித் தமிழை எழுதவும் பேசவும் இயலும் என்று அறிந்தேன். எனவே இம்மூன்று தலைப்புகளில் உள்ள கருத்துருக்களை இந்தப் பயிற்சியில் நாம் நுட்பமாகப் பார்ப்போம். பிழை அறிந்து விலக்குவோம்.

## எழுத்து

எழுத்து என்றால் என்ன ? எழுத்து எப்பொழுது தோன்றியது ? எங்குத் தோன்றியது ?

முதன் முதலில் தோன்றிய மனிதன் விலங்குகளைப் போலவே ஒலிகளை எழுப்பித் தனக்குள் பகிர்ந்து கொண்டான். ஒலிகளே அவனது தொடர்பு மொழியாக இருந்தன.

மாலையில் கூடு திரும்புகிற பறவைகள் அனைத்தும் உரத்து ஒலிக்கும். நண்பர் ஒருவர் அழகாகச் சொன்னார். “உணவு தேடச் சென்ற நான் திரும்பி விட்டேன்” என்று அவை தங்கள் உறவுகளுக்குச் சொல்லுகின்றன என்றார். ஒவ்வொரு பறவையும் கூடு திரும்பியதற்காகத் தங்கள் வருகைப் பதிவேட்டில் ஒலித்துவிட்டுத் தன் கூட்டுக்குச் சென்று விடுகிறது. பறவைகளின் மொழி நமக்குத் தெரியாததால் நாம் அவை என்ன சொல்கின்றன என்று தெரியாமல் விழிக்கிறோம். பறவைகள், விலங்குகள் அனைத்துமே ஒலி வழியாகத்தான் பகிர்ந்து கொள்கின்றன.

விலங்கிலிருந்து தோன்றிய மனிதன் முதன் முதலில் ஒலிகளின் வழியாகத்தான் பகிர்ந்து கொண்டான். ஆ, ஊ, ஓ, ஏ, ஐ, கா, தா, வா, போ, நீ, சா, வை, தை, கை, பை, மை, கோ, தூ, தீ, - என்று ஒலித்துத் தன் கருத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டான். ஒலித்தலே அவனது தொடர்பு மொழியாக இருந்தது.

பகுத்தறிவும், மூளைச் செறிவும் உடைய விலங்காக மனிதன் பரிணாமம் அடைந்ததால், உண்பது, உறங்குவது, உறவு கொள்வது என்கிற விலங்கு நிலையிலிருந்து மேலெழுந்து சிந்திக்கத் தொடங்கினான்.

தன் சூழலை, தன் செயலை, தன் விருப்பத்தை ஒலிக்குறியீடுகளில் ஒலிக்கத் தொடங்கினான். தான் கண்டதை, தனக்கு வேண்டியதை ஒலித்து வெளிப்படுத்தினான்.

ஒலித்ததோடு நிற்காமல் அதைப் பாறைகளிலும், மரங்களிலும், வரி வடிவமாகப் பதிவு செய்தான். மீன், ஆடு, மாடு, மலை, ஆறு, மரம், கல், என அவன் பார்த்தவை அனைத்தையும் படவடிவில் பதிவு செய்தான். இவை தான் எழுத்துக்கான முதல் படிநிலை, இதனைச் செய்தவன், லெமூர் என்ற குரங்கிலிருந்து மனிதனாக மாறிய முதல் மனிதன் செய்தான். எழுத்து ஒலி வடிவிலிருந்து வரி வடிவம் பெற்றது.

லெமூர் என்ற குரங்கினம் வாழ்ந்த பகுதிதான் லெமூரியா. கண்டங்கள் ஒன்றிணைந்து இருந்த பொழுது தென்கோடியில் இருந்த குமரிக் கண்டமே லெமூரியா என அழைக்கப்பட்டது. இதை மாந்தவியல் அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். தென்

பகுதியில் வாழ்ந்த மக்களையே திருவள்ளுவரும் தன் - திருக்குறளில் தென்புலத்தார் - என்று சுட்டிக் காட்டுகிறார். உலகின் தெற்குப் பகுதியில் இருந்த நிலப்பரப்பே லெமூரியா என அழைக்கப்பட்டது.

முதன் முதலில் லெமூரியாக் கண்டத்தில் வாழ்ந்த மனிதன் எழுதிய இந்தப் படவடிவ உருவங்கள் தான், பிறகு படவடிவ எழுத்துகளாகவும், பிறகு வட்ட எழுத்துகளாகவும், பிறகு எழுத்துகளாகவும் மாற்றம் அடைந்தன. இன்று நாம் காணும் எழுத்து வடிவங்கள், பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, பல்வேறு மாற்றங்களுக்குப் பிறகு வடிவம் பெற்றவையே. கீழுள்ள பட்டியலில் எழுத்துகளின் படிநிலைகளைக் காணலாம்.

கடந்த பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுத்து வடிவங்கள் எவ்வாறு இருந்தன என்றும், அவை எப்படித் தொடர்ச்சியான மாற்றங்களால் தற்பொழுதுள்ள எழுத்து வடிவங்களாக மாற்றம் பெற்றுள்ளன என்றும் ஆய்வாளர்களால் கண்டறிந்து, வரிசைப் படுத்தப்பட்டு வெளியிடப் பட்டுள்ளன. இவை நம் தமிழ்எழுத்துகளின் தொன்மையையும், வரலாற்றையும் சுட்டிக் காட்டுவதாக அமைந்துள்ளன. தமிழ் எழுத்துகளின் வளர்நிலைகளைக் கீழுள்ள பட்டியலில் காணலாம்.




வட்ட எழுத்துகள்



படவடிவ எழுத்துகள்



# இலக்கணம் என்பது மொழியின் விதிமுறைகளைக் காட்டுகிற நூல்.

தற்பொழுது நமக்குக் கிடைத்துள்ள பழைய இலக்கண நூல் தொல்காப்பியம் மட்டுமே, அதற்கு முன்பு இருந்ததாகக் கூறப்படுகிற அகத்தியம், வச்சனந்திமாலை நூல்கள் நமக்குக் கிடைக்கவில்லை.

இருந்தாலும் கிடைத்துள்ள இலக்கண நூல்களிலிருந்து, பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் எழுத்துகளைப் பற்றியும், தமிழ் மொழியை எவ்வாறு எழுதவேண்டும், என்பதற்கான விதிமுறைகளைப் பற்றியும் "பா" வடிவில் நூல்கள் எழுதி, எழுதுவதற்கான விதி முறையை முறைபடுத்தியுள்ளார்கள் என்பதை - நம்மிடமுள்ள இலக்கண நூல்களின் வழியாக நாம் அறிய முடிகிறது.

தொல்காப்பியம், இறையனார் களவியல், இறையனார் அகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, அவிநயம், காக்கை பாடினியம், சங்க யாப்பு, சிறுகாக்கை பாடினியம், பன்னிரு படலம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, அமுதசாகரம், வீரசோழியம், இந்திரகாளியம், தமிழ்நெறி விளக்கம், நேமிநாதம், சின்னூல், வெண்பாப் பாட்டியல், தண்டியலங்காரம், அகப்பொருள் விளக்கம், நன்னூல், நம்பி அகப்பொருள், களவியற் காரிகை, பன்னிரு பாட்டியல், நவநீதப் பாட்டியல், வரையறுத்த பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், மாறனலங்காரம், மாறன் அகப்பொருள், பாப்பாவினம், பிரபந்த மரபியல், சிதம்பரச் செய்யுட்கோவை, பிரயோக விவேகம், இலக்கண விளக்கம், இலக்கண விளக்கச் சூறாவளி, இலக்கண கொத்து, தொன்னூல் விளக்கம், பிரபந்த தீபிகை, பிரபந்தத் திரட்டு, இரத்தினச் சுருக்கம், உவமான சங்கிரகம், முத்து வீரியம், சாமிநாதம், அறுவகை இலக்கணம் - ஏழாம் இலக்கணம், வண்ணத்தியல்பு, யாப்பொளி, திருவலங்கல் திரட்டு, இலக்கண தீபம், விருத்தப் பாவியல் - என்று பல்வேறு வகையான இலக்கண நூல்கள் தோன்றி., தமிழ் மொழியின் அமைப்பு, இயங்குமுறை, தமிழர்களின் வாழ்வுமுறை போன்ற அரிய செய்திகளைப் பதிவு செய்துள்ளன.



இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமுருகனார் அவர்கள் சிந்துப்பாவிற்கான இலக்கண நூலான சிந்துப்பாவிலக்கணம் என்ற நூலை எழுதியுள்ளார். இப்படிக் காலந்தோறும் மொழியின் வளர்ச்சி குறித்த பதிவுகளை நம் தமிழ் இலக்கண நூல்கள் தொடர்ந்து பதிவு செய்துள்ளன. இத்தனை வகையான இலக்கண நூல்கள் உலகின் எந்த மொழிகளுக்குமே இல்லை. இதுவே நம் தமிழ் மொழியின் சிறப்பும், பெருமையும் ஆகும்.

ஆக இலக்கண நூல்கள் என்பவை, மொழி வளர்ச்சியின் விளைவாக உருவாகுகிற நுட்பமான மொழி அமைப்பு வடிவங்களின் பதிவாக அமைகிற நூல்கள் என்பதனை நாம் தற்பொழுது உணர முடிகிறது. பிழையின்றிப் பேசவும்,

எழுதவும் இந்த இலக்கண நூல்கள் விதிமுறைகளைக் காட்டியுள்ளன. இந்த இலக்கண நூல்களின் வழியாகப் பெறப்படுகிற கருத்துருக்கள் நமது எழுதுமுறைக்கு வழிகாட்டியாக அமையும் என்று நம்புகிறேன்.

இன்றைய சூழலில் சொல்ஆய்வு அறிஞர்களின் தொடர் உழைப்பால் - ஒவ்வொரு சொல்லும் அதன் வேரிலிருந்து தோன்றியுள்ளன என்றும், அனைத்துச் சொற்களும் பொருள் குறித்தனவாக உள்ளன என்றும் அறிய முடிகிறது. இக்கருத்துருக்கள் சொற்கள் பற்றிய புரிதலுக்கு வழிகாட்டி இருக்கும் என்று நம்புகிறேன்.

எடுத்துக்காட்டாக

அல் - வேர்ச் சொல், நீளுதல், பரப்புதல், விரித்தல் என்ற பொருள் தருவது - அல் = இரவுப் பொழுது, அல்லம் = இஞ்சி, அலக்கு = துறட்டுக்கோல், அலகு = பறவையின் மூக்கு, அலகிடல் = சீர்களை விரித்துப் பார்த்தல் ....எனப் பல சொற்கள் தோன்றுவதற்கு வேராக அமைந்தது,

சள் என்ற வேருக்கு தள்ளப்படுதல் என்று பொருள் - காற்றை உள்ளே தள்ளுவதால் சாளரம் என்று பெயர் பெற்றது. கற்கண்டு = கல் + கண்டு , கல்போன்ற இனிப்புத் துண்டுகளாக இருப்பதால் இப்படிப் பெயர் வந்தது,

இப்படி அனைத்துச் சொற்களும் பொருள் குறித்தனவாக உள்ளன என்றும்., தற்பொழுது நம்மால் அறிய முடிகிறது.

இலக்கண விதிமுறைகள் மற்றும் சொல்லாய்வு அறிஞர்களின் ஆய்வுக் கருத்துகள் என்கிற புரிதலோடு பிழையின்றி எழுதவும் பேசுவதற்குமான அடிப்படைக் கருத்துருக்களை நாம் இங்கு வரிசைப் படுத்துவோம்.

முதன் முதலில் எழுத்துகள் தோன்றி, பிறகு அந்த எழுத்துகள் இணைந்து சொற்களாக ஒலிக்கப் பட்டு, அந்தச் சொற்கள் இணைந்து தொடர்களாக மாற்றம் பெற்று, பிறகு அவை உரைகளாகவும், பாக்களாகவும் எழுதப்பட்டுள்ளன என்பதைத் தற்பொழுது நம்மால் உணர முடிகிறது.

எனவே பிழையின்றிப் பேசுதல் மற்றும் எழுதுதல் என்கிற இந்தப் பயிற்சிக்கு - எழுத்து, சொல், தொடர் என்கிற மூன்று நிலைகளுக்காக எழுதப்பட்டுள்ள கருத்துருக்களை வரிசைப்படுத்தி, எடுத்துக்காட்டுகளுடன் உள்வாங்கினால் இந்தப் பயிற்சியில் நாம் வெற்றியடைய முடியும் என்று நம்புகிறேன்.

**பிழை எது என்று தெரியாமலேயே நம் தமிழர்கள் நான் சரியாக எழுதுகிறேன் பேசுகிறேன் என்று இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். இது பிழை என்று சுட்டிக் காட்டிய பொழுது, வியப்படைகிறார்கள். ஒரு மொழியைப் பிழையின்றி எழுதுவதும், பேசுவதும்தான் அந்த மொழிக்கான வளர்ச்சியாக இருக்கும் என்பதை உணர்ந்த நண்பர்கள், தங்கள் பிழைகளைத் திருத்திக் கொள்ளவும் விரும்பினார்கள். ஏற்று, இயங்க விரும்புகிற இந்த இசைவின் விளைவுதான் இந்த இணையவழியிலான பயிற்சி. வரிசைப் படுத்துகிற கருத்துருக்களை உள்வாங்கி நெஞ்சில் நிறுத்துவதோடு, பிழை எது என்று நுட்பமாக அறிந்து, விலக்க, முன்னெடுப்பீர்களாக.**